# நீர் வெறுப்பு நோய்



9081

மருத்துவர் சி. யமுனாநந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் வெறுப்பு நோய்

மருத்துவர் சி. யமுனாநந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **தலைப்பு** | : | நீர் வெறுப்புநோய் |
| **ஆசிரியர்** | : | Dr. சி. யமுனாநந்தா |
| **உரிமை** | : | ஆசிரியருக்கு |
| **பதிப்பு** | : | முதலாம் பதிப்பு - 2015 |
| **பக்கங்கள்** | : | vi + 34 |
| **அச்சிட்டோர்** | : | கரிகணன் (தனியார்) நிறுவனம்<br>இல. 681, காங்கேசன்துறை வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>தொ.பே: 0094 21 222 2717/8 |
| **பிரதிகள்** | : | 1000 |
| **ISBN** | : | 978-955-42255-0-3 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

நீர் வெறுப்பு நோயினால்

தமது இன்னுயிர்களைத் துறந்த

அன்புக்குரிய உறவுகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 01. | நீர் வெறுப்பு நோய் | - 01 |
| 02. | நீர்வெறுப்புநோயினைக் கடத்தக்கூடிய விலங்குகள் | - 03 |
| 03. | நீர் வெறுப்பு நோய் தொற்றுக்கு ஏதுவான நிகழ்வுகள் | - 03 |
| 04. | நீர் வெறுப்பு நோய் தொற்றுக்கு ஏதுவான நிலைகளும் அவற்றிற்கான தடுப்பு மருந்துகளும் | - 04 |
| 05. | நீர் வெறுப்பு நோய் தடுப்பு சிகிச்சை | - 06 |
| 06. | நீர் வெறுப்பு நோய்த் தடுப்பு மருந்து | - 12 |
| 07. | தோலினூடான தடுப்பு மருந்து | - 13 |
| 08. | காயத்திற்கான முகாமைத்துவம் | - 17 |
| 09. | செல்லப் பிராணிகளும் சிறுவர்களும் | - 19 |
| 10. | விலங்கின் விசர்நோய் ஏற்படாதிருப்பதற்காக நாய் பூனை வளர்ப்போர் செய்ய வேண்டியவை | - 19 |
| 11. | விலங்குகளின் விலங்கின் விசர்நோய் | - 21 |
| 12. | நாய் கடியினை தவிர்க்க செய்ய வேண்டியவை | - 23 |
| 13. | நாய் பூனைகளைப் பாராமரித்தல் | - 24 |
| 14. | நீர்வெறுப்புநோய் தொடர்பான துணுக்குகள் | - 25 |
| 15. | நீர் வெறுப்பு நோய் தொடர்பான ஐயங்களும் விடைகளும் | - 29 |
| 16. | உலக நீர் வெறுப்புநோய் விழிப்பு தினம் | - 32 |
| 17. | விழிப்பு பாடல்கள் | - 33 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

நீர் வெறுப்பு நோய் தற்போது எமது சமூகத்தில் சிறுகச் சிறுகவே உருப்பெருக்கும் உயிர்கொல்லியாக மாறுபட்ட பரிணாமத்தில் உருவெடுத்துள்ளது.

கட்டாக்காலி நாய்களின் பிரசன்னம் அதனை கட்டுப்படுத்தி அல்லது அவற்றிற்கு தடுப்பு மருந்திட முடியாத சூழ்நிலை தாண்டி ஆண்டுதோறும் இலங்கையின் பொருளாதாரத்தில் நாய்க் கடிக்கு பின்பான தடுப்பு மருந்து 350 மில்லியனை தன்னகத்தே ஆட்கொண்டுவிட்ட தன்மை காணப்படுகின்றது.

இதுபற்றி விழிப்படைய வேண்டியது காலத்தின் தேவையாகவே உள்ளது. பொது சுகாதாரத்துறை தொடக்கம் பிரதேசசபை வரை இதற்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும். ஒவ்வொரு தனிநபருக்கும் நாய், பூனை என்பவற்றின் தீண்டல் தொடர்பான விழிப்புனர்வு தேவை.

நீர்வெறுப்புநோய் தொடர்பான விழிப்புணர்வினை உணர்த்தும் இந் நூலானது ஒவ்வொருவரும் கற்றுப் பயன்பெற வேண்டிய படைப்பாகும்.

"பொறுப்புக்களில் இருந்து நாம் விலகி ஓடலாம்.
ஆனால் விளைவுகள் நம்மை நோக்கியே தேடிவரும்."

**மருத்துவர்: வெ. நாகநாதன்**
பொறுப்பு வைத்திய அதிகாரி
நீர்வெறுப்பு நோய்த்தடுப்பு பிரிவு
யாழ் போதனா வைத்தியசாலை.
*10.04.2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நீர் வெறுப்பு நோய் எனும் இக் கையேடு எமது மக்களிடையே காணப்படும் பொதுவான சுகநலப்பிரச்சினையான நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகளின் தீண்டல்களினால் ஏற்படும் பாதிப்பினை இலகுவாக விளக்குகின்றது.

நாய், பூனை கடிக்கும் போது சிகிச்சையை நாடவேண்டிய அவசியத்தினை இந்நூல் விளங்கியுள்ளது. மேலும் செல்லப் பிராணிகளின் தீண்டலைத் தவிர்த்தலின் முக்கியத்துவத்தையும் எடுத்துக்கூறுகின்றது. நீர் வெறுப்பு நோயினை 2020 ஆம் ஆண்டளவில் உலகின் இல்லாது செய்யும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் உத்திக்கு உறுதுணையாக இந் நூல் அமையும் என்பது திண்ணம்.

சுபம்.

**மருத்துவர்: சி. யமுனாநந்தா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01. நீர் வெறுப்பு நோய்

### அறிமுகம்:

நீர் வெறுப்பு நோயினை விலங்குகளின் விசர் நோய் என்றும் ஆங்கிலத்தில் ரேபிஸ்(Rabies) என்றும் அழைப்பர். ஒற்றைச் சங்கிலி RNA வைரசான Lyassa virus இனால் ஏற்படுகின்றது. இது நரம்பு இழையங்களில் அதிக நாட்டமுடையது. நரம்பு இழையங்களிலும் உமிழ்நீர்ச் சுரப்பிகளிலும் நோய்க் கிருமிகள் பெருகுகின்றன.

உலகில் ஆண்டு தோறும் 55.00 பேர் நீர் வெறுப்பு நோயினால் இறக்கின்றனர். இதில் 20.00 பேர் இந்தியாவிலும் 25.000 பேர் ஆபிரிக்காவிலும் அடங்குகின்றனர். இலங்கையில் கடந்த காலங்களில் வருடத்தில் 50 பேர் நீர் வெறுப்பு நோயினால் இறந்துள்ளனர். நீர் வெறுப்பு நோயினால் பாதிக்கப்படுபவர்களில் 30-60% ஆனால் 15 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களாகக் காணப்படுகின்றனர்.

நீர் வெறுப்பு நோயினை விலங்கின் விசர் நோய் என்றும் ஆங்கிலத்தில் ரேபிஸ் (Rabies) என்றும் அழைப்பர்.

உலக சுகாதார நிறுவனம் உலகில் நீர் வெறுப்பு நோயினை 2020 ஆம் ஆண்டளவில் முற்றாக இல்லாது செய்யத் திடசங்கற்பம் கொண்டுள்ளது.

### நோய் ஏற்படும் விதம்

வைரசு காயத்துக்கு அருகில் உள்ள தசைக்கலங்களில் பெருகும். அதன்பின் நரம்புக்கல முடிவிடங்களில் உட்புகுந்து நரம்புக்கல மூளையினூடாக முள்ளந்தண்டுக்கும் அடுத்து மூளைக்கும் செல்லும். நரம்புத்தொகுதியில் அவை மேலும் பெருகி அங்கிருந்து உமிழ்நீர்ச்சுரப்பி, சுவாசப்பை. சிறுநீரகம் மற்றும் ஏனைய அங்கங்களிற்கு தன்னியக்க நரம்புத்தொகுதியூடாகக் கடத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நோயின் தன்மை**

நோயரும்பு காலம் சில வாரங்களிலிருந்து பல வருடங்களாக அமையலாம். சராசரியாக 1-3 மாதங்கள் பொதுவாக தலை, கழுத்து, முகம் போன்ற பகுதியில் ஏற்படுகின்ற காயங்கள் குறைந்த நோயரும்பு காலத்தினைக் கொண்டது. இரண்டு வகையான நீர்வெறுப்பு நோய் நிலைகள் மனிதனில் ஏற்படலாம்.

**1. கோரமான நீர்வெறுப்பு நோய்**

இதன் ஒரே ஒரு அறிகுறி, கடித்த இடத்தில் நோவும், கூசுந்தன்மையும், கடித்த காயத்திற்குக் கிட்டவாகவும் காணப்படும். 10 நாட்களிற்குப் பின் பதகளிப்பு, கோபப்படல், சோர்வு என்பன ஏற்படும். அசாதாரண நடத்தைகளைக் காண்பிப்பர். தசைகள் செயற்படும் தன்மை மாறும். ஒலி, வெளிச்சம் என்பவற்றுக்கு அதிக நரம்புக்கடத்தல் நடைபெறும். 50% நோயில் நீர் வெறுப்புநிலை ஏற்படும். சாப்பிட அல்லது நீரருந்த முற்படும்போது தொண்டைத் தசைகள் சுருங்கும். காற்று வீசுவதற்கும் பயம், வலிப்பு ஏற்படும். சுவாச செயலிழப்பு ஏற்படும். இருதய செயலிழப்பு மூலமே 10 - 14 நாட்களில் இறப்பு ஏற்படும்.

**2. அமைதியான விலங்கின் விசர் நோய்**

தசைகள் செயலிழக்கும். நோயுள்ள வெளவால் கடிப்பதால் ஏற்படும்.

**நீர்வேறுப்புநோய் ஏற்படின் நோயாளியில் பராமரிப்பு**

நீர்வெறுப்பு நோய் நரம்புத் தொகுதியைத் தாக்கும் நோயாகும். நோய் ஏற்படின் இறப்பினைத் தவிர்க்க முடியாது. நோயாளிக்கு ஆறுதல் சிகிச்சையே வழங்கப்படும். அமைதியான, இருளான அறையில் நோயாளியைப் பராமரிப்பர். பாதிக்கப்பட்ட நோயாளியின் உறவினர்களுக்கு உளவளத்துணை வழங்கல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. நீர் வெறுப்பு நோயினைக் கடத்தக்கூடிய விலங்குகள்

| வீட்டு விலங்குகள் | வீடு அல்லது வெளி விலங்குகள் | காட்டு விலங்குகள் |
|---|---|---|
| நாய் | மாடு | நரி |
| பூனை | எருமை | ஓநாய் |
| | ஆடு | குரங்கு |
| | செம்மறி ஆடு | கீரி |
| | பன்றி | கரடி |
| | குதிரை | |
| | ஒட்டகம் | |

1. நகரங்களில் ஏற்படும் நீர் வெறுப்பு நோய் இது விசர்நாய்க் கடிகளாலும், அரிதாகப் பூனைகளினாலும் ஏற்படும்.

2. காட்டு நீர் வெறுப்பு நோய்
காட்டு எலிகள், ஓநாய்கள், கீரி, வௌவால் என்பனவற்றில் காட்டில் ஏற்படும்.

## 03. நீர்வேறுப்பு நோய்த் தொற்றுக்கு ஏதுவான நிகழ்வுகள்

### நோயாளிகளை வைரஸ் தொற்றல் ஏதுநிலைக்கு ஏற்ப வகைப்படுத்தல்

### 1. தொற்றுக்கான பாரிய ஏதுநிலை

* தனிமையான அல்லது பல கடிகாயங்கள் அவற்றில் இருந்து குருதி வரல், குறிப்பாக தலை, கழுத்து, முகம், நெஞ்சம், மேற்கை, உள்ளங்கை, விரல் நுனிகள், விதை, ஆண்குறி ஆகிய இடங்களில் கடித்தல்.

* பல கீறல் காயங்கள் குருதி வடிதலுடன் தலை, கழுத்து, முகத்தில்

* தனிமையான அல்லது பல ஆழமான காயங்கள் உடலின் எப்பாகத்திலும்

* காட்டு மிருகங்களினால் கடிபட்டு குருதி வெளிவரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. நீர் வெறுப்பு நோய்த் தொற்றுகைக்கு ஏதுவான நிலைக்கு தடுப்பு சிகிச்சைகள்

**தொற்றுகைக்கு ஏதுவான சம்பவங்களின் வகைகள்**

| காயத்தின் வகை | சந்தர்ப்பம் | முகாமைத்துவம் |
|---|---|---|
| வகை I | தோல் சேதமடையாத நிலையில் தொடுகை பிராணிகளுக்கு உணவூட்டல் நக்கல் | சிகிச்சை தேவையில்லை |
| வகை II | கீறல்<br>இரத்தம் வராத காயம்<br>*தனியான, மெல்லிய கடித்தல் அல்லது கீறல், குருதி வெளிவராமை, (கால்கள், கைகள், வயிறு, முதுகு.) ஆகிய இடங்களில்<br>* நகத்தினால் தோலில் கீறல்கள்<br>* திறந்த காயத்தில் விலங்கின் உமிழ்நீர் சிந்துதல்<br>* தனிமையான அல்லது பல கடிகள் அல்லது கீறல்கள், குருதிப்பெருக்கு இன்றி உடலின் எப்பாகத்திலும்.<br>* பாதிக்கப்பட்ட பசு அல்லது ஆட்டின் பாலை கொதிக்க வைக்காது குடித்தல் | தடுப்பு ஊசி ARV ஏற்புத்தடுப்பு மருந்தும் வழங்கப்படும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொற்றுகைக்கு ஏதுவான சம்பவங்களின் வகைகள்

| வகை | சந்தர்ப்பம் | முகாமைத்துவம் |
|---|---|---|
| வகை III | தனி அல்லது பலகாயங்கள் கடித்தல், கீறல்காயமுற்ற தோலினை நக்கல்<br><br>* தனிமையான அல்லது பல கடிகாயங்கள் அவற்றில் இருந்து குருதி வரல், குறிப்பாக தலை, கழுத்து, முகம், நெஞ்சம், மேற்கை, உள்ளங்கை, விரல் நுனிகள், விதை, ஆண்குறி ஆகிய இடங்களில் கடித்தல்.<br><br>* பல கீறல் காயங்கள் குருதி வடிதலுடன் தலை, கழுத்து, முகத்தில்<br><br>* தனிமையான அல்லது பல ஆழமான காயங்கள் உடலின் எப்பாகத்திலும்<br><br>* காட்டு மிருகங்களினால் கடிபட்டு குருதி வெளிவரல் | நீர்ப்பீடனம் ARS உம் ARV ஏற்புத் தடுப்பு மருந்தும் வழங்கப்படும். |


வீட்டுச் சூழலில் வெளவால், எலி, பறவைகள், அணில், முயல் என்பன நீர்வெறுப்பு நோயினை ஏற்படுத்தியதாக அறியப்பட வில்லை. எனவே இவற்றினால் கடியுண்டால் பொதுவாக சிகிச்சை அவசியம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. நீர்வெறுப்பு நோய்த்தடுப்புச் சிகிச்சை

## தீர்மான மரவரிப்படம்




படி – 1 – காயத்திற்கான பராமரிப்பு
படி – 2 – ARV அளித்தல்
படி – 3 – ARV உம் ARS (RIG) அளித்தல்

வகை I – ஆபத்தற்ற நிலை
வகை II – தொற்றலுக்கு ஏதுவான சிறிய ஏது நிலை
வாகை III – தொற்றலுக்கு ஏதுவான பாரிய ஏது நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொற்றுக்கு ஏதுவான நிலையில் சிகிச்சை PET (Post Exposure Treatment)

| | மிருகத்தின் நிலை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அதானிக்கக் கூடியது | ஆரோக்கியமானது | நாய்க்குத் தடுப்பு மருந்து கொடுக்கப் பட்டது | நாய்க்குத் தடுப்பு மருந்து கொடுக்கப்படவில்லை | சந்தேகத்துக்குரிய / நோய்வாய்ப்பட்ட நாய் | நோய் | உறுதிப்படுத்திய நாய் | காட்டு மிருகம் | நோயாளிக்கான முகாமைத்துவம் |
| தொற்றுதலுக்கு பாரிய ஏதுநிலை | ✓ | ✓ | | ✓ | | | | | PET தாமதித்து → 14 நாட்களுக்கு நாயினை அவதானித்தல் |
| | ✓ | | | | ✓ | | | | PET தொடங்கி → 14 நாட்களுக்கு நாய் ஆரோக்கியமாக இருந்தால் நிறுத்தலாம் |
| | | | | | | | ✓ | | PET தொடங்கி முழுச் சிகிச்சை |
| | | | | | | | | | PET தொடங்கி முழு அளவு |
| | ✗ | | | | | | | ✓ | முழுச் சிகிச்சை |
| தொற்றுக்கு இறிய ஏதுநிலை | ✓ | ✓ | ✓ | | | | | | தாமதித்து 14 நாட்களுக்கு அவதானிக்கவும் |
| | ✓ | | | | | | | | தாமதித்து |
| | | | | | ✓ | | | | PET தொடங்கி முழுச் சிகிச்சை |
| | ✗ | | | | | | | | PET முழுவதும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. தொற்றலுக்கான சிறிய ஏதுநிலை

* தனியான, மெல்லிய கடித்தல் அல்லது கீறல், குருதி வெளிவராமை, (கால்கள், கைகள், வயிறு, முதுகு.) ஆகிய இடங்களில்
* நகத்தினால் தோலில் கீறல்கள்
* திறந்த காயத்தில் விலங்கின் உமிழ்நீர் சிந்துதல்
* தனிமையான அல்லது பல கடிகள் அல்லது கீறல்கள், குருதிப்பெருக்கு இன்றி உடலின் எப்பாகத்திலும்.
* பாதிக்கப்பட்ட பசு அல்லது ஆட்டின் பாலை கொதிக்க வைக்காது குடித்தல்

## கடித்த விலங்கினை கணிப்பிடல்

1 தொற்றுக்கு பாரிய ஏதுவான நிலையில் காயம் கடித்த நாயினை அல்லது பூனையினை

* விலங்கு ஆரோக்கியமாகவும், அவதானிக்கக் கூடியதாகவும் இருப்பின், குறைந்தது இரண்டு விலங்குகளின் விசர் தடுப்பு மருந்து அவ்விலங்கிற்கு ஏற்றப்பட்டும். அதில் கடைசி தடுப்பு மருந்து கடந்த ஒரு வருடத்தினுள்ளும், இரண்டு வருடத்திற்கு மேற்படாமலும் இருப்பின் தொற்றுக்கு ஏதுவான நிலைக்கான சிகிச்சையினை பிற்போட்டு, விலங்கினை 14 நாட்கள் அவதானிக்கலாம்.

* விலங்கு சந்தேகத்திற்கு உரியதாக அமைந்து ஆனால் அவதானிக்கக்கூடியதாக அமையின் தொற்றுக்கு ஏதுவான நிலையில் சிகிச்சையினை ஆரம்பித்து, கடித்த மிருகத்தினை அவதானித்து 14 நாட்களுக்கு மிருகம் ஆரோக்கியமாக இருக்குமாயின், தடுப்பு மருந்தினை நிறுத்தலாம்.

* விலங்கிற்கு ரேபீஸ் காணப்படுமாயின் அல்லது விலங்கினை அவதானிக்க முடியாத சூழலில் (விலங்கு இறந்தால், கொல்லப்பட்டால், காணாமல் போனால், கட்டாக்காலி விலங்காயின்) தொற்றுக்கு ஏதுவான நிலை எனக் கருதி சிகிச்சையைத் தொடங்கி முழுச்சிகிச்சையினையும் வழங்கல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொற்றுக்கான சிறிய ஏதுநிலையில்**

*கடித்த நாய் பூனையினை கணிப்பிட்டு பாதிக்கப்பட்டவருக்கு*

1. விலங்கு ஆரோக்கியமாகவும் அவதானிக்கக் கூடிய தாகவும் குறைந்தது ஒரு தடுப்பு மருந்து ஏற்றப்பட்டும் இருப்பின் சம்பவத்திற்கு ஒரு வருடத்தினுள் விலங்கிற்கு மூன்று மாத வயதிற்கு மேலும் தடுப்பு மருந்து ஏற்றி ஒரு மாதத்திற்கு பின் சம்பவம் நிகழ்ந்தும் இருப்பின் தொற்றுக்கு ஏதுநிலையில் சிகிச்சையினைப் பிற்போட்டு 14 நாட்கள் விலங்கினை அவதானிக்கலாம்.

2. விலங்கு சந்தேகத்திற்கு உரியதாகவோ, நோயுற்றதாகவோ அமைந்து, அவதானிக்கக்கூடியதாகவும் அமையின் தொற்றல் ஏதுநிலையிலான சிகிச்சைகளைத் தொடங்கி, விலங்கினை அவதானிக்க வேண்டும். 14 நாட்கள் விலங்கு ஆரோக்கியமாக இருப்பின் தடுப்பு மருந்தினை நிறுத்தலாம்.

3. விலங்கிற்கு விலங்கின் விசர் இருப்பின் (ஆய்வு நடத்தி உறுதிப்படுத்தப்பட்டிருப்பின்) அல்லது மிருகத்தினை அவதானிக்க முடியாது அமையின் (இறந்தால்) கொல்லப் பட்டால், காணாமல் போனால், கட்டாக்காலியானால்) தொற்றுக்கு ஏதான நிலையிலான சிகிச்சையினைத் தொடங்கி அதனை முழுமைப்படுத்தல் வேண்டும்.

அவதானிக்கும் காலத்தில் மிருகத்தினைக் கூட்டில் அடைத்தல் அல்லது கட்டி வைத்தல் நல்லது. மிருகம் இறந்தால், நோயுற்றால், ஏதாவது அசாதாரண நடத்தையி னைக் காட்டினால், நோயாளி உடனடியாக வைத்திய சாலைக்குச் செல்லல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்வருவன தொற்றலுக்கு ஏதுவான நிலையெனக் கருதப்படுவதில்லை.**

1. காயப்படாத தோலில் சந்தேகத்திற்குரிய மிருகத்தினுடைய எச்சில் படல்.
2. செல்லமாக அணைத்தல், குளிப்பாட்டல். சந்தேகத்துக்குரிய மிருகத்தின் பொருட்களைத் தொடல்.
3. நீர்வெறுப்பு நோயினால் இறந்தவருக்கு உதவிகள் புரிந்தோர்.

**தொற்றுக்கு ஏதுவான நிலையிலான சிகிச்சைகள்**

1. தொற்றலுக்கான பாரிய ஏதுநிலையில்
   Rabies immunoglobulin உம் (ARS) Anti Rabies Serum
   Anti rabies vaccine (ARV) கெப்படும்.

2. தொற்றலுக்கான சிறிய ஏதுநிலையில்
   Anti rabies vaccine (ARV) மட்டும் கொடுக்கப்படும்.

   கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், சிறுகுழந்தைகள் ஆகியோருக்கு நாய். பூனை கடிப்பினும் எந்தவித விலத்தலும் இன்றி, தொற்றலுக்கு ஏதுவான நிலைகளை கருத்திற்கொண்டு சிகிச்சை அளிக்கப்படும்.

இலங்கையில் இரண்டு வகையான நிர்ப்பீடன மருந்துகள் உள்ளன.

1. ERIG - குதிரையின் Equine சீரத்தில் உருவாக்கப்பட்ட பிற பொருள்
2. HRIG - மனிதனின் (Human) புரத பிற பொருள்

   * RIG சிகிச்சை ஒரு மிகவும் அவதானமாக அளிக்கப்படும் சிகிச்சையாகும். சம்பவம் நடந்த உடனடியாக கொடுக்கப்பட வேண்டும்.

   * பிந்தி வருபவர் - 3 மாதங்கள் வரை, RIG கொடுக்கலாம். ஆனால் அதற்கு முன் ARV எடுத்து இருத்தல் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ERIG அளிப்பதற்கு முன் அதற்கு ஒவ்வாமை உண்டா என அறிதல், தோற்சோதனை செய்யப்படும். தோற்சோதனையில் அழற்சித் தன்மை அறியப்படின், ERIG சிகிச்சை அளிக்க முடியாது. HRIG அளித்தல் வேண்டும்.

**HRIG இல்லாதவிடத்து**

1. கடித்த விலங்கினை அவதானித்துக் கொண்டு மாற்றியமைக் கப்பட்ட - நான்கு இடங்களிற்கான தோலிற்கு ஊடான ARV அளிக்கப்படல் வேண்டும்.

2. மிருகம் அவதானிக்க முடியாததாகவோ விலங்கில் விசர்நோய் உள்ளதாகச் சந்தேகம் இருப்பின் RIG இனை Adrenaline, anti histamine உடன் ICU இல் சிகிச்சை அளித்தல் வேண்டும்.

3. தொற்றலுக்கான பாரிய ஏதுநிலையில் மாற்றிய மைக்கப்பட்ட நான்கு இடங்களிற்கான - ARV கொடுக்கப்படும். (RIG க்குப் பதிலாக), மிருகம் 14 நாட்களுக்குள் இறந்தால், தொலைந் தால், நோயுற்றால், அசாதாரண நடத்தையினைக் காட்டின் ERIG இனை அதிரனலின் (adrenaline), அண்டிகிஸ்ரமின் (antihistamine), கொடுத்து ICU இல் வழங்கப்படும். இதன் பின் மீளவும் கைகளிலும் ID, ARV கொடுக்கப்படும்.

நோயாளி 7 நாட்களின் பின் சிகிச்சைக்கு வரின், ARV தொடங்கி, மாற்றியமைக்கப்பட்ட 4 இடங்களில் ID ARV வழங்கப்படும். RIG இத்தகைய சந்தர்ப்பத்தில் கருதப்படுவதில்லை.

RIG அளவு

ERIG - 40 IU /kg உடல்நிறை

HRIG - 20 IU /kg உடல்நிறை

RIG, காயத்தைச் சுற்றி செலுத்தப்படல் வேண்டும். மேலதிகமான தைத் தொடைத்தசையினுள் செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Deltoid தசைப் பகுதியில் ARV போடப்படல் வேண்டும். RIG போட்ட ARV அதே தினத்தில் வேறு இடத்தில் போடல் வேண்டும்.

**06. நீர் வெறுப்பு நோய்த் தடுப்பு மருந்து Anti Rabies Vaccine (ARV)**

1. சுத்தமான கோழி முனையகல வளர்ப்பு தடுப்பு மருந்து Purified Chick embryo cell culture vaccine
2. சுத்தமான கல ரேபிஸ் தடுப்பு மருந்து Purified Vero cell rabies vaccine PVCV
3. Human diploid Vaccine தசையினுள் செலுத்தும் தடுப்பு மருந்துகள்
   1. தொற்றலுக்கான பாரிய ஏதுநிலையில் 5 தடுப்பு மருந்துகள் RIG வழங்கியபின் உடனேயும் 3ம், 7ம் 30ம் நாட்களில் வழங்கப்படும்.
      $D_0, D_3, D_7, D_{30}$
   2. தொற்றலுக்கான சிறிய ஏதுநிலையில் 5 தடுப்பு மருந்துகள் உடனேயும் 3ம், 7ம் 30ம் நாட்களில் வழங்கப்படும்.
      $D_0, D_3, D_7, D_{30}$

   தசையில் ஊசி, Deltoid தசையில் சிறுவர்களில் தொடையில் முற்பகுதியிலும் (Antero lateral thigh) இடப்படும்.

**தோலின் ஊடான ஊசி மருந்து ஏற்றும்போது ஏற்படும் நீர்ப்பீடனப் பொறிமுறை**

தோலின் ஊடான இடல் என்ற ரேபிஸிக்கான பிறபொருளினை தோற்படைகளினுள் ஊசி மூலம் செலுத்தல் இதன்பின் பிறபொருளானது பிறபொருளைக்காவும் கலங்களால் நிணநீர் தொகுதியூடாகச் சென்று நிணநீர் கணுக்களைச் சென்றடையும். அதன்பின் நிணநீர் தொகுதியில் சரியான பாதுகாப்பான பிறபொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரிக்குரிய விளைவைத்தரும். நீர்ப்பீடனம் என்பது $CD_4$,T cell இல் தங்கியுள்ள பிறபொருள் எதிரி தாக்கம், G புரதத்திற்கான தாக்கத்தில் தங்கி உள்ளது. G புரதத்திற்கான கலங்களின் ஊடான நீர்ப்பீடனம் ரேபிஸ் நோயினைப் பாதுகாக்கும் முக்கிய பொறிமுறையாகும். தோலிற்கு ஊடான நீர்ப்பீடனம், ரேபிஸில் இருந்து பாதுகாக்கப் போதுமானது.குறித்த தினங்களில் தடுப்பு மருந்துகளை ஒழுங்காகப் பெறுவதனால் நிர்ப்பீடணம் பூரணப்படுத்தப்படும் எனவே நோயாளிகள் குறிக்கப்பட்ட நாட்களில் வந்து தடுப்பூசிகளை பெறல் வேண்டும்.

**07. தோலிற்கு ஊடான தடுப்பு மருந்து**

பொதுவாக மாவட்ட வைத்தியசாலை, ஆதார வைத்திய சாலை, பொது வைத்தியசாலை, போதனா வைத்தியசாலை களில் தினமும் ஐந்திற்கு மேற்பட்ட நோயாளிகள் வருகையில் இம்முறை கைக்கொள்ளப்படுகின்றது.

உலக சுகாதார நிறுவனம் இம்முறையினையே வளர்முக நாடுகளிற்கு சிபாரிசு செய்கின்றது. இதன் விலையே பிரயோகத்தினைக் கட்டுப்படுத்தி வைத்து உள்ளது.

1. ஈர் இட தோலிற்கு ஊடான தடுப்பு மருந்துக்கான ஒழுங்கு ஒரு ஊசி, இரண்டு கைகளிலும் (Deltoid) தசைப் பகுதியில் இடப்படும்.

   $D_0$, $D_3$, $D_7$, $D_{30}$
   *2 - 2 - 2 -2*

2. மாற்றியமைக்கப்பட்ட நான்கிட தோலிற்கு ஊடான தடுப்பு மருந்துகள்

   *4 - 2 - 2 -2*

   $D_0$, $D_3$, $D_7$, $D_{30}$


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தோலிற்கு ஊடான நீர் வெறுப்பு நோய் தடுப்பு மருந்து செலுத்துகையில் முற்காப்புக்கள்.**

**அழற்சி நிலையினை சோதித்தல்**

ERIG இன் அழற்சித்தன்மை அறிவதற்காக தோற் பரிசோதனை 1:10 ஐதாக்கிய சேலைனின் ரேபிஸ் குதிரைச் சீர்த்தினை 0.1 ml தோலிற்குக் கீழ் முன்னங்கையில் இடப்படும்.

பிரத்தியேக ஊசி உட்செலுத்தியினால் இப்பரிசோதனை செய்யப்படும். 20 நிமிடங்களின் பின் அதன் தடிப்பு அளக்கப்படும். இது 10mm அதிகமாக இருப்பின் அல்லது உடலில் கடி, மயக்கநிலை ஏற்படின் இச்சோதனை நேர்முடிவானது எனக் கருதப்பட்டு ERIG நோயாளிக்கு வழங்கப்பட்டது.

எல்லா தடுப்பூசிகளும் பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களால் மருத்துவரின் மேற்பார்வையில் அளிக்கப்படல் வேண்டும்.

மருந்துகள் 2-8$^{0}$C களஞ்சியப்படுத்தப்பட்டு இருக்கும். பாவனையில் உள்ள மருந்து 6 மணித்தியாலத்திற்குள் பயன்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு நோயாளிக்கும் தனித்தனியான மருந்து உட்செலுத்திகளும் ஊசிகளும் பயன்படுத்தல் வேண்டும்.

**நீர் வெறுப்பு நோய் ஏற்படாது இருக்க தொற்றலுக்கு ஏதான நிலைக்கு முன்பான தடுப்பு மருந்து.**

நீர் வெறுப்பு நோய் தொற்றலுக்கு ஏதான தொழில்களான ஆய்வுகூடத்தில் வேலை செய்வோர், ரேபிஸ் வைரசு தொற்றாலான மாதிரிகளை கையாளுவோர், கால்நடை மருத்துவர்கள், உதவியாளர்கள், விலங்கின் விசர் நோய் தடுப்பு மருந்துகளை போடுபவர்கள், வன இலாகா உத்தியோகத்தர்கள், மிருகங்களை தடுத்து பராமரிக்கும் பகுதியில் கடமை புரிவோர், மிருகக் காட்சிசாலையில் வேலை செய்வோர், வளர்ப்பு மிருகங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனை செய்வோர், தடுப்பு மருந்துகளைப் பெறல் வேண்டும்.
*1* வருடத்திற்குப் பின் ஒரு தடுப்பூசி போடப்படல் வேண்டும்.
இவர்களுக்கு RIG மருந்து போடக்கூடாது. இவர்கள் பாரிய தொற்றுக்கு ஏதுவான காயத்திற்கு உட்படின் மேலதிகமாக IM ARV, $D_0$, $D_3$, இல் கொடுக்கப்படல் வேண்டும்.

முன்னர் நீர் வெறுப்பு நோய் தொற்றலுக்கு ஏதுவான நிலையில் தடுப்பு மருந்து பெற்றவர்கள் கடியுண்டு வந்தவர்களிற்கான சிகிச்சை.

கடித்த விலங்கு ஆரோக்கியமாக இருந்தால், *14* நாட்களுக்கு விலங்கினை அவதானித்து தடுப்பு மருந்துகளைத் தவிர்க்கலாம்.

கடித்த மிருகம், விலங்கின் விசர் நோயினால் பாதிக்கப்பட்டு இருந்தால் அல்லது காணாமற்போனால் சந்தேகத்திற்குரியதாக உதவியாக இருந்தால்.

ARV முழுமையாக வழங்கிய பின் மீளவும் நாய், பூனை கடித்தவரின்,

*1)* கடைசி ஊசியில் இருந்து

*6* மாதங்களுக்கு நாய் அல்லது பூனை தீண்டின் ARV - (PET) தேவையில்லை.

*2)* கடைசி ஊசியில் இருந்து

*6/12 - 5* வருடங்களுக்கு நாய் அல்லது பூனை தீண்டின்

ARV ID 2 doses. அளிக்கப்படும்.

Or IM ARV

கடைசி ARV போட்டு *5* வருடங்களிற்கு RIG கருதத் தேவையில்லை.

*3) 5* வருடங்கள் கடந்தபின் நாய் பூனை தீண்டி நோயாளி வரும்போது ARV + RIG தேவைக்கு ஏற்ப அளிக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) ஊசிகள் ARV போட்ட பின் (ARV $D_0$, $D_3$, $D_7$)

30 நாட்களிற்குள் நாய், பூனை கடித்துவரின் ID ARV உடனடியாகவும் பின் 30ம் நாளிலும் அளிக்கப்படும்.

5) ARV போட்டு 30 நாட்களின் பின் நாய், பூனை கடித்துவரின் ARV போட்டு ஒரு மாதத்தில் இருந்து 6 மாதங்கள் வரை நாய், கடித்துவரின் ID ARV உடனடியாகவும் வழங்கப்படும்.

3. ARV போட்டு 6 மாதத்தில் இருந்து 5 வருடம் வரை நாய், முழுமையாக 2 site ID ARV or IM ARV வழங்கப்படும்.

5 வருடங்களிற்குப் பிறகு நோய் தொற்று ஏதுநிலைக்கு ஏற்ப சிகிச்சை

ARV + RIG அளிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. காயத்திற்கான முகாமைத்துவம்

ரேபிஸ் வைரஸ் மனிதனின் உடலினுள் கடிகாயத்தின் ஊடாகப் பரவுவதாற் காயத்தில் உள்ள எச்சில், எவ்வளவு அகற்ற முடியுமோ அவ்வளவு வைரசினை அகற்ற முடியும். புண்ணை மேலும் சேதப்படுத்தாது சுத்தப்படுத்த வேண்டும். கடித்த இடத்தில் நிலைத்து நின்று வைரஸ் பெருகும் தகையது. எனவே நோய் கடிபட்டு பிந்தி வந்தாலும் புண்ணை சுத்தப்படுத்துவது கட்டாயம்.

### செய்யவேண்டியது

| | | |
|---|---|---|
| பௌதீக முறை | ஓடும் நீரில்<br>5 நிமிடங்கள் கழுவல் | வைரசினை காயத்தில் இருந்து அகற்றுதல். |
| இரசாயன முறை | சவர்க்காரமும் நீரினாலும் கழுவுதல். | வைரசினை செயலிழக்க செய்தல். |
| உயிரியல் முறை<br>(Biological) | Immunologloblin RIG இனை ஆழமாகவும் காயத்தைச் சுற்றியும் செலுத்தல் | வைரசினை நடுநிலையாக்குவது |

### செய்யக் கூடாதன

காயத்தினை வெறும் கையினால் தொடக்கூடாது. காயத்திற்கு மண், எண்ணை, எலுமிச்சை, தாவர சாயம், சுண்ணாம்பு, வெற்றிலை கூடாது.

## 11. நீர் வெறுப்பு விசர்நோய் ஏற்படாது இருப்பதற்கு காயம் ஏற்ப பின்பான சிகிச்சை

(1) மிருகத்தின் கடிக்குப்பின் நோயாளிக்கான சிகிச்சை

1. காயத்தினை உடனடியாக நீரினாலும், சவர்க்காரமிட்டும் கழுவுதல் சுமார் 5 நிமிடங்களிற்குள் கழுவுதல் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வைத்தியசாலையில் காயத்தினை பூரணமாகச் சுத்தப்படுத்தி 70% அல்ககோல் அல்லது Povidone Iodine ஆல் சுத்தப்படுத்துவர்.

3. ஏற்பு ஊசி தேவைப்படும் பட்சத்தில் அதனை இடல் வேண்டும்.

4. நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை பக்றீறியாக்களில் தொற்றுகளைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்த வேண்டும்.

காயப்பட்ட பின்னான சிகிச்சையில் நோயாளியையும், கடித்த விலங்கின் நிலையையும் பரிசீலிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. செல்லப்பிராணிகளும் சிறுவர்களும்

நாய், பூனை என்பன சிறுவர்களைக் கடித்தல் அல்லது கீறல் பொதுவாக ஏற்படுகின்றது. பொதுவாக சிறுவர்கள் விளையாடும் போது நாய், பூனைகளினால் பாதிக்கப்படலாம். ஆனால் சிறுவர்கள் அதனை மறந்து விடுவர். அல்லது பயத்தினால் பெற்றோருக்குக் கூறமாட்டார்கள். எனவே, இது ஒரு ஆபத்தான நிலையாகும்.

சிறுவர்கள் வாழும் விளையாட்டுச் சூழலில் நாய்கள், பூனைகள் காணப்படின் அவற்றிற்கு விலங்கின் விசர் தடுப்பு மருந்தினை அளிக்க வேண்டியது பெற்றோரின் பொறுப்பாகும். அடுத்து குழந்தைகளிடமிருந்து நாய், பூனைகள் குறித்து அவதானமாக இருக்க அறிவுரை கூறி, அவை தீண்டின் அதனைப் பெற்றோருக்கு உடனடியாக அறியவைக்கவும். விளக்கப்படுத்தல் வேண்டும். நாய்க்கடி பொதுவாக சிறுவர்களிலேயே ஏற்படுவதால் பெற்றோர் இது குறித்து அவதானமாக இருத்தல் வேண்டும். குழந்தைகள் செல்லப்பிராணிகளிடத்து அவதானமில்லாமல் விளையாடும் போது, அவை குறிப்பாக உணவு உண்ணும்போது கோபமடைந்து உடலின் மிகவும் ஆபத்தான காயங்களுக்குரிய இடமான முகத்தில் கடித்துவிடும். செல்லப்பிராணிகளை முத்தமிடக்கூடாது. தெரியாத பிராணிகளிடத்தே அருகே செல்லக் கூடாது. தெருநாய்கள், காட்டு விலங்குகளிற்கு உணவு அளிக்க முற்படக்கூடாது. ஏனெனில் சிலவேளைகளில் கடித்துவிடும்.

## 10. விலங்கின் விசர் ஏற்படாது இருப்பதற்கான நாய், பூனை வளர்ப்போர் செய்ய வேண்டியவை

நாய் பூனைகளுக்கு தடுப்பு மருந்து ஏற்றுவதால், அவை பாதுகாக்கப்படுவதுடன் குடும்ப அங்கத்தவர்களும் பாதுகாக்கப் படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாய்க்குட்டி பூனைக்குட்டிகளுக்கான விலங்கின் விசர் தடுப்பு மருந்து**

தாய் நாய்க்கு மருந்து போட்டு இராவிடின்
உடனே தடுப்பு மருந்து
பின் 3 மாதம் கழிய
பின் ஒழுங்காக வருடத்தில்
தாய்நாய்க்கு அல்லது தாய் பூனைகளுக்கு முழுமையாக விலங்கின் விசர் தடுப்பு மருந்து போடப்பட வேண்டும்.

தாய் நாய்க்கு தடுப்பு போட்டு இருப்பின் அவற்றின் குட்டிகளுக்கு 3 மாதத்தில் இருந்து வருடத்தில் ஒழுங்காக வீட்டில் உள்ள எல்லா விலங்குகளுக்கும் தடுப்பு மருந்து ஏற்ற வேண்டும். எந்த ஒரு விலங்கினையும் கட்டாக்காலியாக்க வேண்டாம்.

மிருகங்களை கட்டாக்காலியாக விடாது இருக்க, அவற்றின் இனப்பெருக்கத்தினுள் கட்டுப்படுத்தலாம். காட்டு மிருகங்களை செல்லப்பிராணிகளாக்கக் கூடாது.

நாய் பூனைகளுக்கு விலங்கின் விசர் தடுப்பு மருந்தினை கால்நடை வைத்தியரின் உதவியுடன் அளித்தல் வேண்டும். நாய், பூனைக் குட்டிகளில் 3 மாத வயதுவரை நிர்ப்பீடனத் தன்மை முதிர்ச்சி யடைதல் குறைவு. ஆதலால் 3 மாத வயதிற்குள் விலங்கின் விசர் தொற்று ஏற்படாது இருக்க தடுப்பு மருந்து ஏற்றியபின்பும், 3 மாத முடிவிலும் விலங்கின் விசர் தடுப்பு மருந்து அவற்றிற்கு ஏற்றப்படும்.

பொதுவாக 4ஆவது கிழமையில் முதலாவது விலங்கின் விசர் தடுப்பு மருந்தும், 16ஆவது கிழமையில் இரண்டாவது தடுப்பு மருந்தும் பின் வருடந்தோறும் ஒரு தடுப்பு மருந்து ஏற்றப்படும்.

தாய் நாய் அல்லது தாய்ப்பூனைக்கு பூரணமாக விலங்கின் விசர் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டு இருந்தால், குட்டிநாய்க்கு அல்லது பூனைக்குட்டிக்கு 12ஆவது கிழமை வயதில் விலங்கின் விசர் தடுப்பு மருந்து அளிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ப்பு நாய் அல்லது பூனைக்கு விலங்கின் விசர் தடுப்பு மருந்து போடாத நாய்கள் கடித்தால், வளர்ப்பு நாய்க்கு விலங்கின் விசர் தடுப்பு மருந்து போடப்பட்டு இருந்தால் முதல்நாள் 2 தடுப்பு மருந்தும் 7ஆம், 21ஆம் நாட்களில் ஒரு தடுப்பு மருந்தும் அளிக்கப்படல் வேண்டும்.

நாய் அல்லது செல்லப்பிராணி வேறு மிருகத்தினால் கடிபடின் மிருக வைத்தியரை நாடலாம்.

**11. விலங்குகளில் விலங்கின் விசர் நோய்**

விலங்கின் விசர் உடைய விலங்குகளில் எல்லா அறிகுறிகளும் முற்றாக வெளிக்காட்டுவதில்லை. அவை பின்வருமாறு அமைய லாம்.

**கொடூர விலங்கின் விசர்நோய் (Furious Rabies)**

அமைதி இன்மையுடன் பாதிக்கப்பட்ட விலங்கு காணப்படும்.
கூடுதலான செயற்பாடுகள் காணப்படும்
தனக்குத்தானே காயப்படுத்தல்
கோபத்துடன் கலைக்கும் அல்லது கடிக்கும்.

**அமைதியான விலங்கின் விசர்நோய் (Dump Rabies)**

பாதிக்கப்பட்ட விலங்கின்
தாடையில் எச்சில் வடிந்து காணப்படும்
உணவு உண்ண முடியாமையிருக்கும்
மூச்சு திணறல் ஏற்படலாம்
வாதம் ஏற்படல், கோபம் ஏற்படலாம்.
மிருகங்கள் இடம் தெரியாது அலையும்
பாதிக்கப்பட்ட விலங்கு விழித்துப் பார்க்கும்.
விழுங்க முடியாத நிலை ஏற்படும்.
வலிப்பு ஏற்படும்
சத்தமிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய்களுக்கு விலங்கின் விசர்நோய் வந்து அந்நாய்கள் இறக்கின்றமை எமது பிரதேசத்தில் அவதானிக்கப்பட்டு உள்ளது. எனவே நாய் பூனை என்பன தீண்டின் நாம் அசிரத்தையாக இருத்தல் கூடாது.

**விலங்கின் விசர் நோயினைக் கட்டுப்படுத்தல்**

1. நாய் அல்லது செல்லப்பிராணியின் பாதுகாவலர்கள் நாய்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தல் வேண்டும். தெருக்களில் அலையவிடக்கூடாது.

   விலங்கின் விசர் தடுப்பு மருந்து ஏற்றிப் பின் கிரமமாக தடுப்பு மருந்து ஏற்றல்.

   தடுப்பு மருந்துக் காட்டைப் பாதுகாத்தல்
   பிரதேசசபையில் பதிதல்
   மிருகங்களிற்கான கட்டுப்பட்ட இனப்பெருக்கம்.

2. பாரிய அளவில் நாய்களின் தடுப்பு மருந்து ஏற்றல்.
   இலங்கையில் நாய்களிற்கு 6 கிழமைகள், 3 மாதம், பின் வருடம் தோறும் தடுப்பு மருந்து ஏற்றல் வேண்டும்.
   நாய்க்கு தடுப்பு ஏற்றியமையை பதிவு செய்த அட்டையினை பாதுகாப்பாக வைத்து, யாருக்காவது அந்நாய் கடிக்கும்போது இதனை வைத்தியருக்கும் காட்ட வேண்டும்.

3. கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்த குடும்பக்கட்டுப்பாட்டு முறையினை நாய்களிற்கு செயற்படுத்தல் வேண்டும்.

4. குப்பைகள், எஞ்சிய உணவுகளை கண்டபடி போடக்கூடாது. இவை நாய்கள் ஒன்று சேரக் காரணமாகவும், அவை நோய்க் கிருமிகள் தொற்றிக்கொள்ள ஏதுவாகவும் அமையும். இந்நிலையிலேயே ரேபிஸ் நோய்க்கிருமிகள் ஒரு நாயில் இருந்து ஏனைய நாய்களுக்குப் பரவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நோய் தொற்றுடையது என சந்தேகப்படும் நாய்களை அழித்தல்.

6. தொடர்ச்சியாக அவதானித்தலும் நெறிப்படுத்தலினையும் சுகாதாரத் திணைக்களமும், கால்நடை வைத்தியத் திணைக்களமும் உள்ளூராட்சியும் இணைந்து செயற்படுத்தல் வேண்டும்.

**12. நாய்க்கடியினைத் தவிர்க்கச் செய்ய வேண்டியவை**

1. நாய் உணவு உண்ணும்போதும், நித்திரை செய்யும் போதும், குட்டிகளுடன் உள்ளபோதும் இடையூறு செய்யக் கூடாது. திடுக்கிட்டு அல்லது பயத்தினால் நாய் கடிக்கலாம். தடிகளையோ, கற்களையோ நாய்மீது எறியக்கூடாது.

2. கட்டப்பட்டு அல்லது வேலியின் பின்னால் இருக்கும் நாயின் அருகில் செல்லக்கூடாது.

3. நாய்க் குட்டிகளுக்கு அருகில் செல்லக்கூடாது. நாய் தனது குட்டிகளைக் காக்க கடிக்கலாம்.

4. நாய்களின் அருகே ஓடவோ அன்றேல் விரைவாக நகரவோ கூடாது. ஓடும் பொருட்களையே நாய் இலகுவாகப் பார்க்கும்.

5. நாயின் கண்களை நேரடியாகப் பார்க்க வேண்டாம். பார்த்தால் பயத்தில் கடிக்கும்.

6. ஆத்திரத்துடன் ஒரு நாய் வந்தால் உறைந்து நிலத்தை மட்டும் பார்க்கவும், மெதுவாகப் பின் செல்லுதல் வேண்டும். திரும்பி ஓடுதல் கூடாது.

7. நாய்க்கு அடிக்கவோ, உதைக்கவோ கூடாது.

8. யாருடைய வீட்டினுள்ளும் அல்லது வளவினுள்ளும் கண்டபடி செல்லக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. நாய் துரத்தும்போது விழுந்தால் முகத்தை நிலத்தைப் பார்த்தபடி, காதைக் கைகளினால் பொத்துதல் வேண்டும். கண், காது, வாய், முகம் பகுதியில் கடித்தால் கிருமி விரைவாக மூளைக்குச் சென்றுவிடும். எனவே இப்பகுதிகளில் காயம் ஏற்படாது இருக்க அவதானமாக இருத்தல் வேண்டும்.

**13. நாய், பூனைகளைப் பராமரித்தல்**

1. நாய்களுக்கு விலங்கின் விசர்த்தடுப்பு மருந்தினை கால்நடை வைத்தியர் மூலமோ, பொறுப்பு சுகாதார அதிகாரி மூலமோ அளித்தல் வேண்டும். நாய்க்குட்டிகள் பிறந்து ஆறு வாரத்தில் முதலாவது விலங்கின் விசர்நோய் தடுப்பு மருந்தும் ஆறுமாத வயதில் இரண்டாவது விலங்கின் விசர் தடுப்பு வருடத்திற்கு மருந்தும் பின்னால் வருடத்திற்கு ஒரு தடவையும் விலங்கின் விசர் தடுப்பு மருந்தும் ஏற்றுதல் வேண்டும்.

2. வீட்டில் வளர்க்கும் நாய், பூனைகள், அளவுக்கதிகமாகப் பெருகி, கண்ட இடங்களில் விடாது, கருத்தடையினை கால்நடை வைத்தியரின் உதவியுடன் செய்தல் வேண்டும்.

3. நோய் சந்தேகமுடைய நாய்கள் தொடர்பில் அவதானமாக இருத்தல் வேண்டும்.

4. நாய்க்குட்டிகளைப் பொது இடங்களில் பொறுப்பற்ற விதத்தில் விடக்கூடாது.

5, நாய் வளர்ப்போர் நாயினைக்கட்டி வளர்த்து அல்லது கூட்டில் வளர்த்து, தெருக்களில் திரியவிடாது ஏனையவர்களைக் கடிக்காது பாதுகாக்கலாம்.

6. வளர்ப்பு நாய்க்குரிய வேலைகளை வீட்டில் ஒருவர் மட்டும் செய்தல் நல்லது.

7. நாய்களை உள்ளூராட்சியில் பதிவு செய்தல் அவசியம்.

8. நாய் கடிக்கும் கவனம் என்ற அறிவுறுத்தல் அவசியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14. நீர்வெறுப்பு நோய் தொடர்பான துணுக்குகள்**

✡ காயத்தினை மூடிக்கட்டுவதிலும் காயத்திற்கு தையல் போடுதல் தவிர்க்கப்படல் வேண்டும். தேவைப்படின் RIG இனை காயத்தினைச் சூழ உட்செலுத்திய பின்பே தையல் இட வேண்டும். அதன் பின்னரே ARV தொடர வேண்டும்.

✡ RIG அல்லது ARV பிட்டப்பகுதியில் போடப்படுவதற்கு ஏனெனில் அவை இதனால் முழுமையாகப் பயன்படல் குறைவு.

✡ சிறுவர்களிற்குப் பல காயங்கள் ஏற்பட்டு இருப்பின் காயத்திற்கு இட வேண்டிய RIG கனவளவு குறைவாக இருப்பின் 2 மடங்கு அல்லது 3 மடங்கிற்கு N.Saline மூலம் ஐதாக்கலாம்.

✡ மனிதனில் இருந்து மனிதனிற்கான விலங்கின் விசர் நோய் பரம்பல் அவதானிக்கப்படவில்லை. ஆனால் விழிவெண்படல மாற்று சிகிச்சை மூலம் பரவலாம்.

✡ நீர் வெறுப்பு நோயாளியுடன் நேரடியாகவோ மறைமுக மாகவோ தொடர்புடையவர்களுக்கு PET தேவையில்லை.

✡ Rabies நோயினை ஆய்வுகூடத்தில் உறுதிப்படுத்த வேண்டும். நாய்க்கு தடுப்பு போடப்படாவிடின் அவதானிப்புக் காலம் கடந்தபின் (14 நாட்கள்) தடுப்பு மருந்தினை ஏற்றல் வேண்டும்.

✡ தாய்மை அடைந்திருந்தாலும் RIG, ARV கொடுக்க அவசிய மெனில் அளித்தல் வேண்டும்.

✡ PET அளிக்கப்பட்டவர்களிற்கு அது குறித்த தகவல்கள் அடங்கிய அட்டை வழங்கப்படும். திகதி, மாதம், வருடம், எந்தத் தடுப்பு மருந்து வழங்கப்பட்டது.

✡ ஏற்பு தடுப்பு மருந்து போடுதல் விலங்கின் விசர் நோயினை பாதுகாக் காது எனவே ஏற்பு ஊசி போட்டவர்களும் கட்டாயம் விலங்கு விசர் நோய் தடுப்பு மருந்தினை தவறாது பெறல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✡ வீட்டு எலிக் கடிக்குத் தேவையில்லை.

✡ நீர் வெறுப்பு நோய் 100 % மரணத்தை ஏற்படுத்தக் கூடிய நோய் ஆனால் அதனை வராது 100 % தடுக்கலாம்.

✡ கடித்த நாய் அல்லது பூனைக்கு ரேபிஸ் தடுப்பு மருந்து பூரணமாகச் செலுத்தப்பட்டு இருப்பினும் அவ்விலங்கிற்கு ரேபிஸ் தொற்று இல்லை என உறுதிபடக் கூற முடியாது.

✡ நாய்க்குப் போடப்படும் தடுப்பு மருந்தின் வீரியம் குறைவாக அமைந்திருந்தால் தடுப்புப் போடப்பட்டாலும் ரேபிஸ் தொற்று ஏற்படலாம்.

✡ தரங்குறைந்த தடுப்பு மருந்து, அளவு குறைந்த தடுப்பு மருந்துகளை நாய்களிற்கு ஏற்றின் அவற்றிற்கு ரேபிஸ் தொற்ற ஏதுநிலை உள்ளது.

✡ போசாக்குக்குறைந்த நிலையில் நாய்க்கு ரேபிஸ் தடுப்பு மருந்து போடப்பட்டால், நோய்த் தடுப்பு நிலையினை அவை பெறாது.

✡ ஒரு ரேபிஸ் தடுப்பு மருந்து போடப்பட்டால், நாய்க்கு நீர்ப் பீடனம் முழுமையாகக் கிடைக்கும் என்று கூற முடியாது.

✡ நாய், பூனை என்பவற்றில் ரேபிஸ் கிருமியின் தாக்கம் மிருக வைத்தியர்களால் அவதானிக்கப்பட்டுள்ளது. அவை ரேபிஸ் கிருமிகளினால் தாக்கப்படின் 10 நாட்களிற்குள் இறக்கும். எனவே நாய், பூனை தீண்டின் அவற்றினை 10 நாட்களுக்கு அவதானிக்குமாறு கூறப்படுவது ரேபிஸ் தொற்றினை உறுதிப்படுத்துவதற்காகவே. 10 நாட்களிற்கு நாய், பூனை உயிருடன் இருப்பின் அவற்றில் ரேபிஸ் கிருமி தொற்று இல்லை. இந்நிலையில் ரேபிஸ் நோய்க்கான தடுப்பு மருந்தினை முற்காப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்தாகச் செலுத்தப்படும். இதனால் அடுத்த ஆறு மாதங்களிற்கு ரேபிஸ் தாக்கம், நாய், பூனை மீண்டும் கடித்து வருவதைத் தடுக்கும்.

✡ நாய், பூனை தவிர்ந்த ஏனைய முலையூட்டிகளிற்கு பத்து நாள் அவதானம் பொருந்தாது. ஏனெனில் அவற்றில் ரேபிஸ் கிருமிகளின் தாக்கம் பொதுவாக அவதானிக்கப்படவில்லை.

✡ கற்பவதிகள், பாலூட்டும் தாய்மார்கள், சிறு குழந்தைகள், முதியோர்கள், நாயினால் அல்லது பூனையினால் தீண்ட படினும் சிகிச்சையினை எந்தத் தவிர்ப்பும் இன்றிக் கருதல் வேண்டும்.

✡ தொற்றுக்கு ஏதுவான நிலையில் தடுப்பு மருந்தினை எவ்வளவு விரைவாக வழங்க முடியுமோ அவ்வளவு விரைவாக வழங்கல் வேண்டும். ஆனால் நோயாளி காலம் தாழ்த்தி வந்தாலும் எவ்விதத் தடங்கலும் இன்றி வழங்கப்படல் வேண்டும்.

✡ காயத்தினை வெறும் கைகளால் தொடக்கூடாது.

✡ ஏற்புத்தடை மருந்துகள் தேவைப்படுமிடத்து அளிக்கப்படல் வேண்டும்.

✡ நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் வழங்கப்படல் வேண்டும்.

✡ சிறுவர்களில் நாய் பல இடங்களில் காயப்படுத்தி இருந்தால் அவற்றிற்கு RIG இனை 2-3 மடங்கு சேலைனில் ஐதாக்கிப் பயன்படுத்தலாம்.

✡ ARV கொடுத்து, ARS கொடுபடாவிடின் ஒரு கிழமைவரை ARV கொடுக்கலாம். ஒரு கிழமைக்குப் பின் ARV இனால் நோய் எதிர்ப்புத் தாக்கம் உடலில் ஏற்பட்டுவிடும். ARS கொடுக்க வேண்டியதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✡ RIG கொடுக்கும்போது வெறும் வயிற்றில் நோயாளி இருக்கக் கூடாது.RIG இனை அறைவெப்பநிலை அல்லது உடல் வெப்பநிலையிலேயே செலுத்தல் வேண்டும்.

✡ குருதி மூலம் ரேபிஸ் கிருமி பரவுவதில்லை.

✡ ARS - ஆரம்பத்தில் கிருமித் தொற்றுதலின் போது வைரசுடன் இணைந்து வைரசு செயற்படுதலைத் தடுக்கும்.

✡ தடுப்பு மருந்து போட்ட இடத்தினை உடனே தடவக் கூடாது.

✡ ஸ்ரொயிட் மருந்து எடுப்பவர்கள், புற்றுநோயால் பாதிக்கப் பட்டவர்கள், நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பிற்கு உட்பட் டோருக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவு. இவர்களிற்கு தசைகளிற்கூடான தடுப்பு மருந்து அளிக்கப்படும்.

* பிராணிகள் கடிக்கும்போது உமிழ்நீருடன் உட்செல்லும் ரேபிஸ் வைரஸ் தசைக்கலங்களில் பெருகும். பின் நரம்புக்கலங்களின் ஊடாக மூளைக்கு சென்று நோய் அறிகுறிகளைக் காட்டும். பின் உமிழ் நீர் சுரப்பியில் பெருகும். உமிழ் நீரினால் கிருமி பரவும். இது கடித்தலின் மூலமும் நகக் கீறலின் மூலமும் உமிழ் நீரால் பரவும்.

* குட்டி நாய்களுக்கும் பூனைகளுக்கும் நீர்பீடனம் குறைவு ஆதலால் விலங்கின் விசர்நோய் ஏற்படும் சாத்தியம் அதிகம்.

* ARS தடுப்பூசி பெருகும் வைரஸ் கிருமியினை நடுநிலையாக்கி அழிக்கும், ARS தடுப்பூசி உடலில் நீர்பீடனத்தை ஒருகிழமையில் ஏற்படுத்தி வைரசினை எதிர்த்தழிக்கும்.

* விலங்கின் விசர்நோய்க் கிருமிகள் உமிழ்நீரினால் பரவப்படுகின்றது. இது நோயுற்ற விலங்கு கடிப்பதினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் பரவும். முளையூட்டிகளில் இக் கிருமி வாழக்கூடிய தன்மை உடையது. ஊனுண்ணிகளிலேயே தொற்றுதல் அடையும் நிலை காணப்படும்.

* ஊனுண்ணிகளின் எச்சில் அவற்றின் நகத்தில் படும்போது அவற்றில் ரேபிஸ் கிருமி காணப்படின் நகத் தீண்டலின்போது கிருமித் தொற்றலுக்கு ஏதுவாக அமையும்.

## 15. நீர்வெறுப்பு நோய் தொடர்பான ஐயங்களும் விடைகளும்

*1)* எந்த மிருகங்களிற்கு விலங்கின் விசர்நோய் ஏற்படுகின்றது?
பொதுவாக நாய்களிற்கும், ஊனுண்ணிகளுக்கும் விலங்கின் விசர்நோய் ஏற்படலாம்.

*2)* மனிதன் எவ்வாறு விலங்கின் விசர்நோய்த் தொற்றுக்கு ஆளாவார்?
விலங்கின் விசர் நோயுடைய நாய் கடிப்பதால், மூளைக்கு கிருமி சென்று பெருக ஆரம்பித்தால் இறப்பு நிச்சயம்.

*3)* நாய்கள் எவ்வாறு விலங்கின் விசர்நோயினை பெற்றுக்கொள்ளும்?
நோயுற்ற நாய்களில் இருந்து அல்லது காட்டு மிருகங்களில் இருந்து

*4)* நாய் கடித்தவுடன் யாது செய்ய வேண்டும்?
கடியுண்ட இடத்தினை ஓடும் நீரினால் சவர்க்காரமிட்டு கழுவுதல் வேண்டும்.

*5)* நல்ல நாயா? என்று எவ்வாறு கூறுவது?
அசாதாரண நடத்தைகளைக் காட்டாத விலங்கின் விசர் தடுப்பு மருந்துகளை முற்றாகப் பெற்ற நாய்.

*6)* நோயுற்ற நாயின் அறிகுறிகள் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயிற்கு விலங்கின் விசர்நோய் ஏற்பட்டால் தோன்றும் அறிகுறிகள்

1. நாய் கோபமடைந்து காணப்படும்.
2. கண்ணில் தென்படும் பொருட்களைக் கடிக்கும்.
3. நீர், உணவை விழுங்கமுடியாதநிலை காணப்படும்.
4. கண்கள் சிவந்து, வாயில் இருந்து அதிகமாக உமிழ்நீர் வடிந்து கொண்டிருக்கும்.
5. திடீரென எந்தத் தூண்டலுமின்றி, மனிதரையும், ஏனைய விலங்குகளையும் கடிக்கும்.
6. அசாதாரணமாக ஊழையிடும்.
7. வால் கீழ்நோக்கி வளைந்திருக்கும்.
8. அசாதாரண செயற்பாடுகளைத் தொடர்ந்து நாய் இறந்து விடும்.

7. நாய்க்கடியில் இருந்து தவிர்ப்பது எப்படி?

புதிய தெரியாத வீடுகளிற்குச் செல்லக்கூடாது. நாய் உணவு உண்ணும்போதும், நீர் அருந்தும் போதும் தீண்டக்கூடாது. செல்லப்பிராணிகளுடன் அவதானமாக இருத்தல் வேண்டும்.

8. விலங்கின் விசர்நோயினை எவ்வாறு இல்லாது செய்யலாம்?

✡ வளர்ப்பு நாய்களிற்கு முறையாக விலங்கின் விசர்த் தடுப்பு மருந்திடல்.

✡ தெருநாய்களைக் கட்டுப்படுத்தல்.

✡ தெருநாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்.

✡ நாய் கடித்தால் வைத்தியரின் சிகிச்சையினை நாடல்

✡ சிறுவர்கள் நாய்களிடத்தில் அவதானமாக இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✡ ஏனெனில் நாய் கடித்தாலும் கூறமாட்டார்கள்.
- ✡ நாய் கடித்தால் உரிமையாளர்களிடம் தண்டப் பணம் அறவிடல்.

9. ஏற்கனவே தடுப்பு ஊசிகள் ஏற்றப்பட்டவருக்கு நாய் அல்லது பூனை கடிப்பின் யாது செய்ய வேண்டும்.?

- ✡ வலிமையான cell culture வக்சீன் எடுத்தால் 2 மேலதிக தடுப்பு ஊசிகளை *0, 3*ம் நாட்களில் இடலாம் RIG தேவையில்லை. கடைசி ஊசிபோட்டு 6 மாதங்களில் இருந்து 5 வருடம் வரை இவ்வாறு நோக்கலாம். இங்கு முன்னைய தடுப்பூசிகளின் உறுதித்தன்மை கருத்தில் எடுக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. உலக நீர் வெறுப்பு நோய் விழிப்பு தினம்

புரட்டாதி மாதம் 28ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. நீர் வெறுப்பு நோயினால் இறப்புக்கள் ஏற்படாது தடுத்தலே மிகவும் அவசியமானது. நோய் ஏற்படின் மரணம் நிச்சயம். எனவே உரிய தடுப்பு மருந்துகளை நாம் நாய், பூனை போன்றவை தீண்டும் போது எடுப்பதால் மரணத்தைத் தவிர்த்திடலாம்.

நீர் வெறுப்பு நோய்க்குரிய தடுப்பு மருந்தினை தடுப்பு மருந்துகள் யாவற்றிற்கும் தந்தையான அறிவியல் மேதை லூயி பாஸ்டர் அவர்கள் கண்டறிந்தார்.

நாம் எமது செல்லப்பிராணிகளான நாய், பூணை என்பவற்றிற்கு ஒவ்வொரு வருடமும் தவறாது தடுப்பு மருந்து போடுவதால், தற்செயலாக அப்பிராணிகள் எம்மைத் தீண்டினும் ஆவத்து ஏற்படுவது குறைவாக இருக்கும்.

காட்டு விலங்குகள் மற்றும் வீதி ஒர விலங்குகளுக்கு அருகில் செல்வதோ அவற்றிற்கு உணவு ஊட்ட முயல்வதோ, அவற்றினால் நாம் தீண்டப்படக் காரணமாக அமையும் எனவே இதை நாம் தவிர்க்க வேண்டும்.

சிறுவர்கள் நாய், பூணை, தீண்டினாலும் அதைப் பெற்றோருக்குக் கூற மறந்து விடுவர். பெற்றோர் அடிப்பார்கள், அல்லது ஊசி போடப் பயத்தின் நிமிர்த்தம் கூற மாட்டார்கள். எனவே பெற்றோர்கள் சிறு பிள்ளைகளிடத்து அவதானமாக இருத்தல் வேண்டும்.

பெற்றோரும் வளர்த்த நாய்தான் கடித்தது குட்டி நாய் தான் கடித்தது என்று, நாய் கடித்தாலும் வைத்திய சிகிச்சைக்கு விரைவதில்லை. இது தவறானது. அணுகுமுறை என்பதனை விளக்கப்படுத்தல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. விழிப்புப் பாடல்கள்

**நீர்வெறுப்பு நோய்க்கு மருந்தில்லைக் கண்டீர்**
**நீர்வெறுப்பு நோய் வாராதிட மருந்துண்டு கேளீர்!**

நீர்வெறுப்பு நோய்க்கு மருந்தில்லை கண்டீர்
நீர்வெறுப்பு நோய் வாராதிட மருந்துண்டு கேளீர்
விலங்கின் விசர் வாராதிட நாய்களிற்கு தடுப்பூசி அளித்திடுவோம்.
ஆண்டிற்கு ஒரு தடவை அதனை அளித்திடுவோம்.
பூனைகளிற்கு தடுப்பூசி தனை அளித்திடுவோம்.
ஆண்டிற்கு ஒரு தடவை அதனை அளித்திடுவோம்.
நாய்களை கட்டி வளர்த்திடுவோம் கண்டீர்
பிறரை கடியாது காத்திடுவோம். கேளீர்
நீர்வெறுப்பு நோய்க்கு மருந்தில்லை கண்டீர்
நீர்வெறுப்பு நோய் வாராதிட மருந்துண்டு கேளீர்

நீர்வெறுப்பு நோய்க்கு மருந்தில்லை கண்டீர்
நீர்வெறுப்பு நோய் வாராதிட மருந்துண்டு கேளீர்
தெரு நாய்களை ஆதரவளியோம் அதனால்
விலங்கின்விசர் ஏற்படாதிருக்க விழித்திடுவோம்
தெருவினில் உணவிடோம் அதனால்
காட்டாக்காலி பெருகிடாது காத்திடுவோம்
நாய், பூனை என்பனவற்றை பொது இடத்தில் கண்டீர்
குட்டிகளாக அநாதரவாகவிடோம் கேளீர்
நீர்வெறுப்பு நோய்க்கு மருந்தில்லை கண்டீர்
நீர்வெறுப்பு நோய் வாராதிட மருந்துண்டு கேளீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒழியுமே நீர் வெறுப்பு நோயிறப்பு இங்கு

நன்றியுள்ள நண்பன் நம் நாய் - என்றும்
சென்றிடுவோம் தடுப்பூசி அதற்கிடவே இன்று
பெற்றிடும் விலங்கின் விசர்த்தடுப்பதனால் - நாம்
வென்றிடுவோம் நீர் வெறுப்பு நோயிறப்பினையே இன்று.

தெரு நாய்கள் பல சேர்ந்து இங்கு
பெரு மெடுப்பில் பெருகுவதைத் தடுத்து
கடி நாய்களால் வதைப்படுதலைக் குறைத்திடுவீர்
கடித்திடினும் உடனே விரைந்திடுவீர்
கடித்திடினும் உடனே விரைந்திடுவீர் வைத்தியத்திற்கு

காயமுற்ற இடத்தில் மருந்தினால் சுத்த மிட்டு
காயமுற்ற இடத்தில் தடுப்பு மருந்து ஏற்றி
கிரமமாகத் தடுப்பூசி பெறல் நலமே நாய்க்கடியில்
சிரமமில்லாது தடுத்திடுவோம் நீர் வெறுப்பு
நோயிறப்பினையே.

வேண்டாத இடங்களிற்கு விரையாது
தவிர்த்திடலாம் நாய்க்கடியினை - நாம்
தீண்டாது விடுவதால் நாயினைத்
தவிர்த்திடலாம் நாய்க்கடியினைச் சிறுவர்களே.

வழிப்போக்கர்கள், வயோதிபர்கள் மற்றும்
மாணவர்கள் இதனைக்கருதின், என்றும்
விழிப்படைவோம், செயற்படுவோம் ஆதலால்
ஒழியுமே நீர் வெறுப்பு நோயிறப்பு - இங்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 955422550-4

Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org